20

# ஔவையார் தனிப்பாடலில் பாரி மகளிர் திருமணம்

முனைவர். து. சரஸ்வதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுய நிதிப் பிரிவு )
ஸ்ரீமதி தேவ் குன்வர் நானா லால் பட் வைணவக் கல்லூரி,குரோம்பேட்டை,
சென்னை -44

**ஆய்வுச் சுருக்கம்**

ஔவையாரின் தனிப்பாடலில் பாரிமகளிர் திருமணம் பற்றிய செய்திகள் 12பாடல்களில் காணக் கிடைகின்றன. இதில் இல்லறத்தில் ஈடுபடாத ஔவை பாரி மக்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கும் தருணம் தமிழகத்தையே ஒருங்கே திரட்டிய தமிழ் ஆளுமை வியந்து போற்றும் அளவிற்கு இருந்ததை அறிந்து கொள்ள முடிந்தது.

**தரவுச் சொற்கள் :** திருமண ஓலை,சிற்றாடை,சிரஞ்சீவி, மேளாண்மை குழு

**முன்னுரை:**

சங்கம் தொடங்கி இக்காலம் வரை தமிழ் இலக்கியங்களில் பெண் என்பவள் தாய் செவிலி தோழி, மனைவி, மகள் என்ற நிலைப்பாடுகளில் நல்ல இல்லறத்தை கட்டமைப்பதில் எத்தகைய பங்களிப்பை தந்தாளோ!அதே சமயத்தில் கல்வி என்ற கண்ணாடி வழியே இந்த சமூகத்தை கட்டமைப்பதில் தன்னுடைய சிந்தனையை வெளிப்படுத்த தவறவில்லை என்பதை சங்க நூல்களில் பெண்பாற் புலவர்களின் படைப்புகளின் வழியாகவும்,காலம் தோறும் வெளிப்படுத்தி வரும் பெண் கவிஞர்களின் படைப்புகளுமே,அதற்கு சான்றாக திகழ்கின்றன. அத்தகைய ஆளுமையான ஔவை என்ற பெண்பாற் புலவரின் தனிப்பாடல்களில்,பாரி மக்களான அங்கவை சங்கவை ஆகிய இருவருக்கும் திருமணம் நடத்தி வைப்பதின் வழியாக,அவரின் தாய்மை உணர்வினையும்,மூவேந்தர்களையும் திருமணத்திற்கு அழைப்பதின் வழியே ஔவையின் ஆளுமை பண்பினையும் அவ்வையாரின் தனிப்பாடல்கள் வழியே காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் எனலாம்.

**ஔவை பெயர்க் காரணம் :**

ஔவை என்ற சொல் தாய் மூதாட்டி பெண் துறவி தவப் பெண் என்றெல்லாம் அகராதிகள் பொருள் கூறுகின்றன. ஔவை என்னும் சொல் அன்னை என்னும் பொருளில் இலக்கியங்களில் வழங்கி வருகிறது. ஒவ்வொரு காலத்திலும் ஔவை என்ற பெயரில் செய்யுள்கள் பாடப்பட்டு வருவதை இலக்கிய வரலாறுகள்குறிப்பிடுகின்றன.மூவே ந்தர்களாலும் குறுநில மன்னர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர் அதியமானால் அரசியல் தூதுவராக அனுப்ப பெறும் அளவு மதிக்கப்பெற்றவர்.ஔவையாரின் பிறப்பு வளர்ப்பு பற்றி சங்கப்பாடல்களில் செய்தி இல்லை தனி பாடல்களை ஆராய்ந்தால் ஔவையார் வாழ்க்கை பற்றிய சில குறிப்புகள் கிடைக்கின்றன( வரலாற்றில் ஔவை பக்.17)

**ஔவை பிறப்பு:**

பகவன் அல்லது ஞானி தன் என்பவனுக்கும் ஆதிக்கும் பிறந்தவர் அவை பாணர் செய்தியிலே வளர்ந்தார். பகவனாரும் ஆதியும் பிறக்கும் பிள்ளைகளை எல்லாம் பிறக்கும் இடத்திலேயே வைத்து விட்டு செல்ல வேண்டும் என்று தமிழ் செய்து கொண்ட உறுதிமொழி படி ஔவையை பெற்றவுடன் தாய் இட் சிசுவை எவ்வாறு விட்டுப் போவேன் என்று இரக்கம் கொண்டு நின்றாள் அன்னை.அவளை நோக்கி,

"இட்டவுடன் என் தலையில் இன்னப்படி என்று எழுதி

விட்ட சிவனும் செத்துவிட்டானோ, முட்ட முட்ட
பஞ்சமே ஆனாலும் பாரம் அவனுக்கு அன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ!”

என்னும் பாடலை பாடி பாணன் வீட்டிலும் திருக்கோவிலூரிலும் வளர்ந்தார் ஔவை.

பாணன் ஔவைக்கு மணம் செய்ய ஒரு மணமகனை நிச்சயத்து அவனிடம் தன் குல ஆச்சாரப்படி சேலை முதலியன பெற்று தன் குமரியை உடுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். பெண் சேலையை உடுத்திக் கொண்டு கிழ உருவு தாங்கி வந்தாள். அதனால் மணமகன் வேண்டாம் என நீங்கினால் அன்று முதல் ஔவை என பெயர் பெற்று காலம் கழித்து வரலானார் (தனிப்பாடல் திர. பக். 119)

வாழ்ந்தவர் என்னப்பட்டாலும் வரலாற்று ஆசிரியர்களின் கூற்றின்படி மூன்று பெண்பார் புலவர்கள் 12 ஆம் நூற்றாண்டுக்கு முன் ஔவை என்னும் பெயருடனும் ஒருமித்த குணாதிசயங்களோடும் புலமையோடும் வெவ்வேறு காலகட்டங்களில் தமிழகத்தில் வாழ்ந்தனர். முதலாம் ஔவை கடைச்சங்க காலத்தில் வள்ளுவர்,நக்கீரர் போன்றோரின் காலகட்டத்தில் வாழ்ந்ததாகவும் இரண்டாம் ஔவை பக்திலக்கிய காலத்திலும் மூன்றாம் அவர் கம்பர் புகழேந்தி போன்றோர் காலம் என்றும் கூறுகின்றனர். இல்லற வாழ்வில் ஈடுபடாதவள் இளம் பெண்கள் இருவருக்கு மணமுடித்து வைத்த மாண்பு போற்றுதற்குரியது.

**பாரி மகளிர்**

பரம்பு மலை சூழ்ந்த 300 ஊர்களைக் கொண்ட வளநாட்டின் மன்னனாக இருந்த பாரி மன்னன் மகளிர் இருவர் பாதி கொள்ளப்பட்ட பின்பு கபிலர் அவர்களை அழைத்துச் சென்றார்

“அற்றை திங்கள் அவ்வெண்ணிலவில்எந்தையும் உடையேன்
எம்குன்றும்பிறர்கொளர் எம்குன்றும்பிறர்கொளர்
இற்றைத் திங்கள் இவண்ணிலவில்
வென்று எரி முரசின் வேந்தர் எம் குன்றும்
கொண்டார் யாம் எந்தையும் இலமே”

என்று தன் தந்தையை இழந்த துயரத்தை பாடிய செய்தியை புறநானூற்று 112 வது பாடல் தெரிவிக்கின்றது பாரி மகளை அழைத்துச் சென்ற கபிலரும் வடக்கிருந்து உயிர் நீத்து விட்டார். பாரியின் மறைவுக்குப் பின் அவர்கள் இருவரும் திருக்கோவிலூரில் தென்பெண்ணை ஆற்றங்கரையில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தனர் அவ்வையார் திருக்கோவிலூருக்கு வந்திருந்த போது மழை பெய்து கொண்டு இருந்தது மழையில் நனைந்த ஔவையார் அந்த குடிசையின் திண்ணையில் அமர்ந்தார். வந்திருப்பது ஔவையார் என அறிந்து கொண்ட அங்கவையும் சங்கவையும் அவரை வீட்டிற்குள் அழைத்தனர் அவரது தலையை துவட்டுவதற்கு துணியை கொடுத்தனர். மேலும் தங்களிடம் இருந்த நீல நிற சிற்றாடையை அவ்வையாருக்கு மாற்றுடையாக கொடுத்தனர் அவ்வையாரின் பசியை போக்குவதற்காக அவருக்கு கேழ்வரகு களியும், கீரை கறியும் சமைத்துக் கொடுத்தனர், தந்தையைப் போலவே பாரியின் மக்களும் கொடை பண்புடன் விளங்கியதை கண்ட ஔவ்வையார் இவ்வாறு பாடினார்.

“பாரி பறித்த பரியும் பழையனூர்
காரி கொடுத்த கலை கொட்டும் சேரமான்
வாராய் என அழைத்த வாய்மையும் இம்மூன்றும்

நீல சிற்றாடைக்கு நேர்”

( ஔவை தனி. பக். 47)

மேற்கண்ட பாடலில் சங்க காலத்தை சேர்ந்த பாரி காரி சேர மன்னன் ஆகியோருடன் தொடர்புடைய நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

**பாரி மகளிர் திருமணம்:**

ஆதரவு அற்ற நிலையில் இருந்த பாரி மகளிரை கண்ட ஔவை மனம் வருந்தினார். திருமண வயதில் இருக்கும் அவர்களுக்கு மணமுடித்து வைக்க எண்ணினார் சங்கவை ஔகவையின் மனம் அறிந்து கொண்டு திருக்கோவலூர் மலையமானின் மன்னனிடம் சென்றார். மலையமான் மன்னன் முதலில் மறுப்பு தெரிவித்தான். மூவேந்தரின் பகையை சம்பாதித்து உயிர் விட்டவன் பாரின் அவனது பெண்களை நான் திருமணம் செய்து கொண்டால் மூவேந்தரும் என்னை பகைவனாக கருதுவார்கள் என்று கூறி மறுத்தான். அதைக் கேட்டு ஔவையார் மூவேந்தரும் தமிழ் மன்னர்கள் அவர்கள் இரண்டு பெண்களின் வாழ்வை அளிக்கும் இழிப்பண்பினர் அல்லர் அவர்களின் வாழ்த்துடன் உனது திருமணத்தை நடத்தி வைக்கிறேன் என்று உறுதி கூறி மூவேந்தருக்கும் தனித்தனியே அழைப்பு அனுப்பினார்.(வர. ஔ. பக். 120)

**திருமண ஓலை**

எந்த ஒரு செயலையும் தொடங்குவதற்கு முன்னால் அச்செயல் இடையூறின்றி முடிவதன் பொருட்டாக வழிபடு தெய்வத்தை வணங்க வேண்டும் என்பார்கள். இங்குஅவ்வையின் வழிபடு தெய்வமாக இருக்கும் விநாயகரை அங்கவை சங்கவை ஆகிய தாம் அன்பு கொண்ட மக்களின் திருமண ஓலையை எழுதுமாறு வேண்டுகிறார்.

“ஒற்றைக்கொம்பனே இரு செவிகளையும் மும்மதங்களையும் தொங்குகின்ற வாயினையும் உடையவனே யானை தோலை போர்த்து எலும்பு மாலைகளை அணிந்தும் விலங்கும் சிவபுராணியின் திருக்குமாரனே “.இப்பெண்களிடத்தில் இரக்கமுடையவனாக இவர்களின் திருமண ஓலையினை எழுதுவதற்கு விரைந்து வருவாயாக! என்று விநாயகரிடம் வேண்டுகிறார் ஔவையார்.

திருமணம் என்பது இருமனம் இணைந்து விட்ட நிலையில் தொடங்கியதாக பழந்தமிழர் பாடல்கள் குறிப்பிடுகின்றன காலப்போக்கில் அதில் பிழை ஏற்படவே சான்றோர்கள் சில விதிமுறைகளை வகுத்தனர். (தமிழர். பழக்க. நம்பிக். பக். 34) ஒரு ஆண் ஒரு பெண்ணை திருமணம் முடிக்க வேண்டும் என்றால் பெற்றோர் உறவுகள் முன்னிலையில் சடங்குகள் நிகழ்த்த நடக்க வேண்டும் என்ற ஒரு கட்டமைப்பு கொண்டுவரப்பட்டது இங்கு பாரி மகள் இருக்க பெற்றோர் இல்லை ஆனால் பெண்ணுக்கு செய்ய வேண்டிய மன வினைகளை உறவுகள் முன்னிலையில் அவர்கள் வாழ்த்துவதுடன் நடக்க ஏற்பாடு செய்தார். அதில் உறவுகளின் உறவு பாலம் சரியாக இல்லாத நிலையில் இது போன்ற நிகழ்வுகள் உறவுகளை இணைக்கும் பாலமாக திகழும் அந்த நிலைப்பாட்டை தான் ஔவையாரும் இங்கே நிகழ்த்த விரும்புகிறார். மூவேந்தருக்கும் பாரின் மீதான பகையை மாற்றுதல் மற்றும் பாரி மகளிரின் திருமணம் சான்றோரின் வாழ்த்துதலோடு நடைபெறுதல் போன்ற திட்டங்களோடு மூவேந்தருக்கும் அழைப்பு விடுத்தார்.

**மூவேந்தருக்கும் அழைப்பு விடுத்தல் :**

சீடர்களின் கோமானே செழுமையும் அழகுனுடைய திருக்கோவலூர் அளவிற்கு நீ வருவாயாக!நடந்ததை எண்ணி மனம் உடையாதே! பாரி மகளான அங்கவையை மணந்து கொள்ள அரசர் மனம் இசைந்துவிட்டனர் சங்கவையையும் கூட மணந்து கொள்ள இசைவு தந்துவிட்டனர். எனவே எவ்வகை இடையூரும் நேராது என உறுதி கூறி அழைத்தார்.

சேரனுக்கு பிறகு சோழனை அழைப்பதற்கு ஓலை அனுப்பினார்.அதில் புகார் நகரத்தில் இருந்த அரசியல் மன்னவனே! பொன்னி நதிவளம் பெருக்கும் வளநாட்டிற்கு உரியவனே! பாரி மகளிர்

திருமணத்திற்கு எள்ளி நகையாடி இருந்து விடாதே! கோவிலூருக்கு வருவாயாக என்று அழைப்பு விடுத்தார்.

பாரியினை கொன்றதில் பாண்டியனுக்கு பங்கு இருந்தாலும் போருக்கு பின்னர் பாண்டியன் அறம் தவறி போர் நடத்தியதால் வருந்தினான். தன்னுடைய பிழையை உணர்ந்து வருந்தும் பெருந்தன்மை கொண்ட பாண்டியனிடம் பாரி மகளிர் இருவருக்கும் சீர்வரிசைகள் கொண்டுவரும்படி ஓலை விடுகின்றார் வையார் வைகைத் துறைக்கு உரியவனே மதுராபுரியில் இருந்து அரசியற்றும் தென்னவனே பாரி மகளிர் இருக்க வேண்டிய சீர்வரிசைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு பதினெட்டாம் நாள் அடையும் படி வந்து சேருவாயாக செய்ய தகாத செயல் என்று வராத இருந்து விடாதே என்று கட்டளையிடுகிறார் ஔவையார்.

சேர சோழரிடம் கொண்டு வரும்படி எதுவும் கேட்காதவர் பாண்டியனிடம் மட்டும் சீர்கொண்டு வரும்படி பணிக்கின்றார். பாரியின் வீழ்ச்சிக்கு பின்னர் பரம்பு நாடு பாண்டிய நாட்டுடன் இணைக்கப்பட்டுவிட்டது. அதனால் முறையாக பாண்டியன் தான் சீர் செய்ய தகுதியானவன் என்று ஔவை நினைத்ததாகக் கூறப்படுகின்றது. பரிசிலுக்காக புலவர்கள் பாடுபவர்கள் என்றாலும் தனக்கு இன்ன பொருள் வேண்டுமென்று அரசனிடம் கேட்க மாட்டார்கள். ஆனால் பிறர் துயர் களைய வேண்டும் என்றால் எதற்கும் துணிவார்கள் என்பதற்கு ஔவையே சான்று. பொருளுக்காக மட்டும் பாடாமல் தன்னை காக்கின்ற மன்னர்களை இடித்துரைத்தல், அறிவுரை கூறுதல், அரசை நடத்தும் முறை சொல்லுதல் என்றுமட்டும் இல்லாமல், தனக்கு உதவி செய்தவன் என்பதால் அவன் இல்லை என்றாலும் அவன் நிலையில் நின்று அவன் தன் பிள்ளைகளை மணம் முடித்துக் கொடுக்கும் மிகப்பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டது வியக்கத்தக்கது.
சேர சோழ பாண்டியரை அழைத்த ஔவையாருக்கு அவர்களை தக்கபடி வரவேற்று உபசரிக்கும் பொறுப்பும் இருந்ததால் மழைக்கு வருணபகவானை அழைத்தார். வருணனை பொன் மழையாக பொழிந்து உதவும்படி வேண்டினார்.

“கருணையால் இந்த கடலுலகம் காக்கும்

வருணனே மாமலையன் கோவற் - பெருமணத்து

முன்மாரி பெய்யும் முதுவாரியை மாற்றிப்

பொன்மாரி யாகப்பொழி!”

ஔவையாருக்கு துணையாக இறைசக்தி செயல்பட்டதை பாடல் வரியால் உணரலாம். ஓலையை எழுத விநாயகரை அழைத்தார்,திருமணத்திற்கு வேண்டிய பொருட்களை வாங்க வருணனை பொன்மழை பொழிய அழைத்தார், பெண் நினைத்தால் எதுவும் நடக்கும் என்பதனை ஔவையார் பாடல்கள் உணர்த்துகின்றது. மேலும் நடக்க இருக்கும் திருமணம் பாரி மகளிர் திருமணம். நடுத்தர குடியானவனின் வீட்டு திருமண மல்ல எனவே அதற்கு வேண்டிய பால் மோர் தயிர் நெய் எல்லாம் அதிக அளவில் வேண்டும் என்பதால் பெருகிவரும் பெண்ணை ஆற்றிடம் உதவி வேண்டினார் பெண்ணை ஆறும் அப்படியே பாலாகவும், நெய்யாகவும் பெருகி வந்தது.

**புதுப் பொலிவு பெற்று விளங்கும் திருக்கோவலூர்:**

பாரி உயிருடன் இருந்து தம் மக்களுக்கு திருமணம் நடத்தி வைத்திருந்தால் சீரும் சிறப்புமாக நடத்தி வைத்திருப்பான். ஆனால் அவ்வைய்யோ அதற்கும் மேல்விகு விமரிசையாக திருமணத்தை நடத்தி வைத்தார். பாடல்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது வரும் மூவேந்தர்களும் தம் பரிவாரத்துடன் வந்து மனவிழாவில் கலந்து கொண்டதும் ஒருபுறம் பருத்திகள் ஆடைகளை வந்தவர்கள் எல்லாம் வழங்கப்பட்டது. வயல்கள் அரிசியை வழங்கினர் திருமண விழா நன்முறையில்

நடந்தேறியது.

தமிழகமே கொண்டாடிய விழா :

ஔவையின் தமிழால், தெய்வீக சக்தியால் மூவேந்தர்களும் தங்களுடைய பகையை மறந்து பாரி மகளிர் திருமணத்தில் கூடியிருந்தார்கள். தமிழகமே கொண்டாடிய ஒப்பற்ற விழாவாக அமைந்ததைக் காண முடிகின்றது .பொருள் படைத்தவர்களாக இருந்தாலும் எல்லாவற்றையும் சாதித்து விட முடியாது என்பதற்கு ஔவையின் பாடல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. மூவேந்தரும் ஒரு பணம் துண்டத்தில் கலை பாரா அமர்ந்திருந்தனர் அப்பொழுது மூவேந்தர்களுள் ஒருவருக்கு பணம் வழங்கும் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறவே பணம் பழத்திற்கு ஏற்ற காலம் இது அன்று என்றவாறு ஔவையை நோக்க அவரும் இவ்வாறு தமிழ் பாட தொடங்கினார்.

நுங்கு கண் முற்றி அடிக்கண் கருத்து நுனி சிவந்து

பங்குக்கு மூன்று பழம் தர வேண்டும் பணம் துண்டமே!”

வெண் சங்கினைப் போல் குறுத்தினை தோற்றுவித்து நுங்கு கண்கள் முற்றி ஒவ்வொருவர் பங்குக்கு மும்மூன்று பழங்களாக தர வேண்டும் என்று பனம் துண்டத்தை பார்த்து பாடியது. பனம் துண்டமும் அவ்வாறு மரமாகி பழங்களை தந்ததை பார்த்து வியப்பில் ஆழ்த்தியது

**ஔவையார் பரிசு :**

மூவேந்தரும் மணப்பெண்களுக்கு பரிசீல்களை வழங்கினர்.அவ்வையாரும் மணப்பெண்களுக்கு தம்முடைய நினைவாக பால் தரும் ஆட்டினை தர விரும்பினார். எனவே சேரனிடம் ஆடு ஒன்று கேட்டார். சேரனோ பொன்னார் செய்த ஆடும் குட்டியும் கைது கொண்டு வந்து கொடுக்க செய்தான் இதனை கண்ட ஔவையார் இறப்பவர்கள் யாராக இருந்தாலும் கொடையாளர்தம் தகுதியை கருதியை வழங்க வேண்டும் என்பதற்கு சான்றாக சேரனைப் போற்றி பாடினார் மேலும் மணப்பெண்ணுக்கு பால் கொடுக்கும் பசுவைக் கொடுப்பது வழக்கமாக இதிலிருந்து வந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது

**முடிவுரை :**

சங்ககாலம் தொட்டு திருமணம் என்பது சான்றோர்களால், மங்கள மகளிரால் இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்வாங்கு வாழ்ந்து வரும் பெண்களால் நடத்தி வைக்கப்பட்டு வரும் மரபை காணலாம். இங்கோ ஔவை மூதாட்டி , இல்லறத்தில் ஈடுபடாதவர் என்றாலும் தாயுள்ளம் கொண்டவர் ஒரு பிள்ளையை பெற்றெடுப்பவர்களை மட்டும் தாய் என்றில்லாமல் தமிழை கற்பிக்கும் ஆசானாய் ஔவையும் தாயாகி இரண்டு பெண் மக்களுக்கு செய்த திருமண ஏற்பாடுகள் இன்றைக்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் மேளாண்மை குழு போன்று, இயற்கையும் இறையாற்றலும் ஔவைக்கு துணை நின்று அத்துணை சிறப்பாய் திருமணத்தை நடத்தி வைத்ததை ஔவையாரின் தனிப்பாடல்கள் மூலம்அறிந்து கொள்ள முடிந்தது. ஔவையின் தமிழ் ஆளுமையால், பகை மறந்து தமிழகம் ஒன்றாகித் திகழ்ந்த பான்மையையும் இக்கட்டுரை வழியே காண முடிந்தது பெண்ணுக்கு கொடுக்கும் சீர்களில் பசுவையும் சீராக கொடுக்கும் வழக்கம் இருப்பதற்கான சான்றிணையும் ஔவையாரின் தனிப்பாடல்கள் வழியாக அறிந்து கொள்ள முடிந்தது.

**துணை நூற்பட்டியல்**

1. தனிபாடல் திரட்டு, 2004 சென்னை

2. ஔவையார் தனிபாடல் திரட்டு 1988 சென்னை

3. இலட்சுமி. ஜே.ஆர்,வரலாற்றில் ஔவை, மதன்மோனிகா பதிப்பகம் சென்னை,2011

4.காந்தி.கே, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,2008